★ சேட்டிங்
★ சூட்டிங்
★ சாறீஸ்
★ பிளவுஸ்பீஸ்
வகைகளுக்கு

ஞானம்
ஆடையகம்

54, சோதியா தெரு,
யாழ்ப்பாணம்.

பக்கங்கள் நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

கோவில் தேவைகளுக்குரிய
★ குடை ★ கொடி
★ ஆலவட்டம்
★ வாகுமால்
என்பவற்றுக்கு

ஞானம்
ஆடையகம்

54, சோதியா தெரு,
யாழ்ப்பாணம்.

சுடர் 10 திருவள்ளுவர் ஆண்டு 2026 மாசி 22 திங்கட்கிழமை (06 – 03 – 1995) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 99

# பலமான நிலையில் இருந்து பேசுகின்றோம்
# ஆகவே நாம் ஒரு போதும் ஏமாறமாட்டோம்!

## 5 ஆவது நாளாக தொடரும் கைதிகள் உண்ணாவிரதம்

### உடல்நிலை மோசமடைகிறது

கொழும்பு, மார்ச்.6

தம்மை விடுவிக்க மனிதாபிமான அடிப்படையில் உடன் நடவடிக்கை எடுக்குமாறு அரசிடம் கோரி விடுதலைப் புலிகளின் காவலில் உள்ள யுத்தக் கைதிகள் ஐந்தாவது நாளாக தமது உண்ணா விரதத்தை தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றனர்.

கடந்த ஐந்து நாட்களாக நீராகாரம் மட்டும் அருந்தி வரும் கைதிகளின் உடல் நிலை நேற்று மிகவும் பாதிக்கபட்டிருந்தது.

தலைச்சுற்று, வயிறுஎரிவு, வயிற்றோட்டம், கண்எரிவு, உடற்சோர்வு என்பன காரணமாகத் தாம் பெரும் உடல் உபாதைக்கு உட்பட்டிருப்பதாகவும் கைதிகள் தெரிவித்தனர்.

கைதிகள் அனைவரும் எழுந்து இருக்க முடியாத நிலையில் தொடர்ந்தும் படுத்த படுக்கையிலேயே நேற்றும் காணப்பட்டனர்,

கைதிகளில் சிலரின் உடல் நிலை மோசமடைந்து வருவதை மருத்துவத் துறையினர் உறுதி செய்துள்ளனர். (ஐ-3-7)

## கலை இலக்கிய கருத்தரங்கில் தமிழ்ச்செல்வன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 6

"நாம் பலமான நிலையில் இருந்துதான் பேசுகின்றோம். அதனால் நாம் ஒரு போதும் ஏமாற மாட்டோம்".

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. சு. ப. தமிழ்ச்செல்வன் இவ்வாறு கூறினார்.

நேற்று நல்லூர் இளங்கலைஞர் மன்ற கலா மண்டபத்தில் நடைபெற்ற கலை இலக்கிய கருத்தரங்கில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறினார்.

விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக்கழகமும் 'வெளிச்சம்' சஞ்சிகையும் இணைந்து நடத்திய இக்கருத்தரங்கின் மூன்றாம் நாள்—நிறைவு தின மாலை நிகழ்வுகளில் கலந்து கொண்டு அவர் உரையாற்றினார்.

அங்கு அவர் மேலும் கூறியதாவது:-

இன்று ஒரு பேச்சுவார்த்

( 4 ஆம் பக்கம் பார்க்க)

## ஆஸ்பத்திரியில் இருந்தவர் கடற்கரையில் சடலமாகமீட்பு

யாழ். பண்ணைப் பாலத்தடியில் கடற்கரையில் இறந்து கிடக்க காணப்பட்ட ஒருவரின் சடலத்தை காவல்துறையினர் நேற்று யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைத்தனர்.

நாவலி தெற்கைச் சேர்ந்த அல்பிறெட் இராசநாயகம் (46வயது) என்பவரது சடலமே இவ்வாறு ஒப்படைக்கப்பட்டது.

அல்பிறெட் இராசநாயகம் இம் மாதம் முதலாம் திகதி கிணற்றில் விழுந்ததைத் தொடர்ந்து சிகிச்சைக்காக ஆஸ்பத்திரி 9ஆம் வார்ட்டில் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

நேற்று முன்தினம் இவர் எவருக்கும் அறிவிக்காமல் வார்ட்டை விட்டுச் சென்றிருந்தார் எனச் சொல்லப்படுகிறது. [அ-13]

## கிரனேட் வெடித்து பூநகரியில் சிப்பாய் பலி!

கொழும்பு, மார்ச்.6

பூநகரி இராணுவ முகாமில் கடந்த வெள்ளியன்று கிரனேட் ஒன்று தற்செயலாக வெடித்ததில் இராணுவச் சிப்பாய் ஒருவர் உயிரிழந்தார்

உயிரிழந்த சிப்பாயின் ''பொக்கற்றினுள்'' இருந்த கிரனேட்டே திடீரென வெடித்ததாகக் கொழும்பில் இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ-4)

## போருக்கு தயாராக இருக்க வேண்டும்என்ற அனுருத்தவின் கருத்துக்கு வாசுதேவ கண்டனம்

கொழும்பு, மார்ச் 6

அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே நடைபெறும் சமாதானப் பேச்சுவார்த்தை தோல்வி காணும் பட்சத்தில் —

எமது படைகள் போருக்குத் தயாராக இருக்க வேண்டும் என்று பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் கேணல் அனுருத்த ரத்வத்தை கூறியிருப்பதை இரத்தினபுரி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திரு. வாசுதேவ நாணயக்கார கண்டித்துள்ளார்.

அது தொடர்பாக அவர் பி.பி.ஸிக்கு தெரிவித்ததாவது:-

கேணல் அனுருத்த ரத்வத்தையின் கருத்து பொருத்தமற்றதாகும். சமாதானத்தின் தேவையைப் புரிந்து கொள்ளாதோரைத் தவிர வேறு எவருமே இவ்வாறு கூறுவது கடினமாகும்.

சமாதானப் பேச்சுக்களை விளையாட்டாக கருதினால் மட்டுமே ''ஒன்றில் சமாதானம் அல்லது போர்'' எனக் கூற முடியும்.

சமாதானம் மிகவும் சிக்கலானதும் ஆழமானதும் ஆகும். அதனை எச்சரிக்கையுடன் அணுக வேண்டும்.

அல்லாவிடின் எவருமே சமாதானத்தை எட்ட முடியாது. சிந்தித்து கொள்கை அடிப்படையில் கருத்து வெளியிடுதல் வேண்டும். கூற்றுக்கு பிரதிக் கூற்று என்ற வகையில் கருத்து வெளியிடலாகாது.— என்று வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார். (ஐ-6)

## ஜனாதிபதியைச் சந்தித்து விடுதலைக்கு உதவுங்கள்

### உறவினருக்கும் கைதிகள் கடிதம்

யாழ்ப்பாணம், மார்ச்.6

''எமது உடல் நிலை மோசமாகி வருவதால் உடன் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவைச் சந்தித்துப் பேசி எமது விடுதலைக்கு உதவுங்கள்''

உண்ணா விரதம் மேற்கொண்டு வரும் யுத்தக் கைதிகள் முன் கண்டவாறு தமது பெற்றோருக்கும், உறவினர்களுக்கும் உருக்கமான வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

தம்மை பார்வையிட நேற்று முன்தினம் வந்த செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழு அதிகாரிகள் மூலமாக உறவினர்களுக்கு அனுப்பிய கடிதங்களில் இந்த வேண்டுகோளை உண்ணாவிரதிகள் விடுத்துள்ளனர். (ஐ-3-7)

## பரீட்சை ஆணையாளர் ஆதர் வெதமுல்லவுக்கு சேவை நீடிப்பு இல்லை

யாழ்ப்பாணம், மார்ச். 6

பரீட்சை ஆணையாளர் நாயகமாக இதுவரை பணியாற்றி வந்த ஆதர் வெதமுல்லவுக்கு பதவி நீடிப்பு வழங்க அரசு மறுத்து விட்டதாகத் தெரிய வருகிறது.

பதவியில் இருந்து ஓய்வு பெற்ற பின்னர் கடந்த ஐந்து வருடங்களுக்கு மேலாக ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றிவந்தஅவருக்கு சேவை நீடிப்பு வழங்க புதிய அரசு மறுத்துள்ள காரணத்தால் இம்மாத இறுதியுடன் அவர்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளுடன் பேசி எம்மை விடுவிக்க உடன் நடவடிக்கை எடுங்கள்

### ஜனாதிபதிக்கு யுத்தக்கைதிகள் அவசர கடிதம்

யாழ்ப்பாணம், மார்ச். 6

ஐந்தாவது நாளாக நாம் உண்ணாவிரதம் மேற்கொண்டுள்ளோம். விடுதலைப் புலிகளுடன் பேசி மனிதாபிமான அடிப்படையில் எம்மை விடுவிக்க உடன் நடவடிக்கை எடுங்கள்.

இவ்வாறு கோரும் அவசர கடிதம் ஒன்றை உண்ணாவிரதம் மேற்கொண்டு வரும் யுத்தக் கைதிகள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவுக்கு நேற்று அனுப்பியுள்ளனர்.

தம்மைப் பார்வையிட வந்த ஐரிஷ் செய்தியாளர் ஒருவர் மூலமாக இக்கடிதத்தை கைதிகள் அனுப்பியுள்ளனர்.

உண்ணாவிரதம் ஆரம்பித்த கடந்த முதலாம் திகதி தாம் கடிதம் ஒன்றை அனுப்பியிருந்ததாகவும், அதற்கு இதுவரை பதில் எதுவும் கிடைக்கவில்லை என்றும் — அந்தக் கடிதத்தில் கைதிகள் தெரிவித்துள்ளனர்.

ஜனாதிபதியின் பதில் கடிதம் 7 ஆம் திகதிக்கு முன் (செவ்வாய்) தமக்கு கிடைக்கா விட்டால் மறுநாள் 8 ஆம் திகதி முதல் எதுவித ஆகாரமும் இன்றி உண்ணா விரதப் போராட்டத்தைத் தொடரப் போவதாகவும் யுத்தக் கைதிகள் மேலும் தெரிவித்துள்ளனர்.

யுத்தக் கைதிகளின் கடிதத்தை பெற்றுக் கொண்ட ஐரிஷ் செய்தியாளர் இன்று இங்கிருந்து கொழும்பு செல்லவுள்ளார். (ஐ-3-7)

## யுனிசெவ் பிரதி நிதிகள் யாழ். விஜயம்

யாழ்ப்பாணம், மார்ச் .6

யுனிசெவ் நிறுவனத்தின் கொழும்பு பிரதி நிதிகள் இருவர் நாளை செவ்வாய்க் கிழமை யாழ்.வரவுள்ளனர்.

அதன் இலங்கைக்கான திட்ட அதிகாரி திருமதி அனோஜா விஜயசேகரா, உதவி திட்ட அதிகாரி ஐ.ஏ. ஹமீட் ஆகிய இருவருமே இங்கு வரவுள்ளனர்.

இவர்கள் இருவரும் 6 நாட்கள் இங்கு தங்கியிருப்பர் எனத் தெரிவிக்கப் பட்டது. (ஐ-4)

## குரேக்கு எம். பி பதவி வழங்க கட்சிக்குள் எதிர்ப்பு

கொழும்பு, மார்ச் 6

முன்னாள் அமைச்சரான சிறிசேனகுரேயை ஐக்கிய தேசியக் கட்சியின் தேசியப் பட்டியல் எம். பியாக நியமிக்க வேண்டும் என்றயோசனைக்கு கட்சிக்குள் பலத்த எதிர்ப்பு ஏற்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

காலி நகர மண்டபத்தில் கடந்த வாரம் நடந்த ஐ. தே க. வருடாந்த மாநாட்டில் திரு. குரேயை தேசியட்பட்டி எம் பியாக நியமிக்கும் படி கட்சிப்பிரமுகர் லயனல் ஒ ஹல வத்த கோரிக்கை விடுத்த போது கூட்டத்தில் குழப்ப நிலை ஏற்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. கூச்சலின் மத்தியிலும் அவர்தொடர்ந்துபேசினார்.

எனினும்— ஒரு கட்டத்தில் கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலையிட்டு, ''திரு. குரே கட்சிக்கு சேவை செய்தவர் ஆவார் அவர் இன்னும் கட்சியில் உள்ளார்'' —என்று குறிப்பிட்டார். (எ)

## கொழும்பில் தமிழருக்கு எதிராக மீண்டும் படையினர் கெடுபிடி!

யாழ்ப்பாணம், மார்ச். 6

கடந்த புதன்கிழமை முதல் கொழும்பு நகரிலும் அதன் சுற்றுப் புறங்களிலும் ஸ்ரீலங்கா பாதுகாப்புப் படையினரின் பாதுகாப்புக் கெடுபிடிகள் அதிகரித்திருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

புதிய அரசு பதவி ஏற்றதும் சற்றுத் தணிந்திருந்த இவ்வகையான கெடுபிடிகள் மீண்டும் தொடங்கியிருப்பதால் அப்பகுதிகளில் வாழும் தமிழ் மக்களிடையே பெரும் பீதி நிலை தோன்றி உள்ளது.

தலைவர் பிரபாகரன் ஜனாதிபதிக்கு அனுப்பிய கடைசிக் கடிதத்தை தென் பகுதிப் பத்திரிகைகள் முக்கியத்துவம் கொடுத்து பிரசுரித்ததை அடுத்தே இக் கெடுபிடிகள் அதிகரித்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வீதிகளில் பொலீசாருடன் இணைந்து முப்படையினரும் சோதனைகளில் ஈடுபட்டுள்ளனர். படையினரின் ரோந்தும் அதிகரித்துள்ளது.

மோட்டார் வாகனங்கள் கடுமையாக சோதனையிடப்படுகின்றன.

அத்துடன் பாதுகாப்புப் படையினரும் பொலிசாரும் ''லொட்ஜுகள்'', தமிழர்களின் வீடுகள் ஆகியவற்றுக்குச் சென்று தேடுதல் வேட்டை மேற்கொண்டு வருகின்றனர். (உ-3-7)

## வடக்கே கப்பலில் வரும் பொருள்கள் கொழும்பில் வைத்து தீவிர சோதனை

யாழ்ப்பாணம், மார்ச். 6

வடக்கிற்கு கப்பல் மூலம் எடுத்துச் செல்வதற்காக கொழும்புத் துறைமுகத்துக்குக் கொண்டு செல்லப்படும் பொருள்களை படையினர் அங்கு வைத்து கடும் சோதனைக்கு உட்படுத்துவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதுவரை காலமும் — வடக்கிற்கு எடுத்துச் செல்ல தடை நீக்கப்பட்ட பொருளாக இருந்தாலும் அவை பாதுகாப்பு இணைப்புக் குழுவின் அனுமதியுடனேயே கப்பலில் ஏற்றப்பட்டு

(4 ஆம் பக்கம் பார்க்க)

## 50 ஊழல் பேர்வழிகளின் பாஸ்போட்டுகள் ரத்து?

கொழும்பு, மார்ச். 6

அரசியல் கொலைகள், ஊழல் நடவடிக்கைகள் உட்பட பலவேறு முறை கேடுகளை விசாரிப்பதற்கென நியமிக்கப்பட்டுள்ள ஜனாதிபதி ஆணைக்குழு முன்னிலையில் ஆஜராக வேண்டியவர்கள் எனக் கருதப்படும் சுமார் 50 பேரின் கடவுச் சீட்டுக்களை ரத்துச் செய்வதற்கான ஆரம்ப நடவடிக்கைகளை பாதுகாப்புத் துறையினர் எடுத்துள்ளனர்.

''லங்காதீப'' ஞாயிறு வார இதழ் இத்தகவலை வெளியிட்டுள்ளது.

ஐ. தே. கட்சி அரசியல்வாதிகள், வர்த்தகப் பிரமுகர்கள், முன்னாள் அரச அதிகாரிகள் ஆகியோர் இவர்களில் அடங்குவர் என்றும் —

இவர்கள் நாட்டை விட்டு வெளியேறுவதைத் தடுப்பதற்காகவே இந் நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் தெரிவிக்கப் படுகிறது. (ட-ஐ-6)

## அரசின் சமாதான முயற்சிகள் பலனளிக்கத் தொடங்கியுள்ளன

### திருமலையில் ஜனாதிபதி சந்திரிகா தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 6

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் சமாதானத்தை நிலைநாட்ட அரசு எடுத்துள்ள முயற்சிகள் பலனளிக்கத் தொடங்கியுள்ளன என ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா தெரிவித்தார்.

திருகோணமலை மாவட்டம், கப்பல்துறையில் மாதிரிக் கிராமம் ஒன்றை நேற்று திறந்து வைத்துப் பேசுகையில் இவ்வாறு தெரிவித்தார்.

ஜனாதிபதி அங்கு மேலும் சொன்னதாவது;

விடுதலைப் புலிகள் இயக்கமும் அரசும் மோதல் தவிர்ப்பு ஒப்பந்தம் செய்து இரண்டு மாதங்கள் கடந்து விட்டன.

[4 ஆம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஹேமாவுக்கு பாதுகாப்பு மீண்டும் அதிகரிப்பு

### கட்சிக்குள் இருந்து ஆபத்தாம்

கொழும்பு, மார்ச் 6

தமக்கு பல்வேறு சக்திகளினால் பயமுறுத்தல் விடுக்கப்பட்டிருப்பதாக ஹேமா பிரேமதாஸா அரசுக்கு அறிவித்ததைத் தொடர்ந்து, அவருக்கு வழங்கப்பட்டுள்ள மெய்ப்பாதுகாவலர்களின் எண்ணிக்கை 10இல் இருந்து 16 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது.

கடந்த மாதம் வரை ஹேமா பிரேமதாஸாவுக்கும் அவரது குடும்பத்தினருக்கும் 55 மெய்ப்பாதுகாவலர்கள் பாதுகாப்பு வழங்கி வந்தனர். இந்த எண்ணிக்கை பின்னர். அரசாங்கத்தினால் 10 ஆகக் குறைக்கப்பட்டது.

தமக்கும் தமது குடும்பத்தினருக்கும் ஐக்கிய தேசியக் கட்சிக்குள் இருந்தும் வெளியே இருந்தும் அச்சுறுத்தல்இருப்பதாக அமைச்சுக்களின் பாதுகாப்புபிரிவின்ஊடாக ஹேமா பிரேமதாஸாமுறையிட்டதை அடுத்து, மெய்ப்பாதுகாவலரின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டிருப்பதாக தெரிவிக்கப் படுகிறது. [எ]

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

முட்டையிடும் ஒரு சோடி வான் கோழிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: சி யோகராசா, 'ஜொலி ஹவுஸ்', முகமாலை. [35510]

### வீனஸ் அன்ரனா

T. V. அன்ரனா பொருத்துதல், பழுதுபார்த்தல், T. V. டெக், றேடியோ, மணிக்கூடுகள் திருத்திக் கொள்வதற்கு வீனஸ் டிக்கா வாச் அன்ட் றேடியோ வேக்ஸ், 284, ஸ்ரான்லி வீதி (ஆரியகுளம் சந்தி), யாழ்ப்பாணம். கிளை, கண்டி வீதி, சாவகச்சேரி. [சி-396]

### புலமைப் பரிசில் - 95

ஆண்டு 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கான பொது உளச்சார்பு, பொது அறிவு பயிற்சி வினாத்தாள்கள் விடைகளுடன் ஒவ்வொரு மாதமும் 2வது, 4வது ஞாயிற்றுக்கிழமையிலும் ஊக்குவிப்பு பயிற்சிகள் ஒவ்வொரு வாரமும் எம்மால் வெளியிடப்படுகின்றன. நேரில் / தபாலில்/ பிரபல புத்தக நிறுவனங்களில் பெற்றுக் கொள்ளலாம். Bond. 58A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (8357)

### பயிற்சி வினாத்தாள்கள்

ஆண்டுகள் 3 4 5 6 7,8 9, 10 O/L,A/Lக்குரிய எல்லாப் பாடங்களுக்குமான பயிற்சி வினாத்தாள்கள் விடைகளுடன் ஒவ்வொரு மாதமும் எம்மால் வெளியிடப்படுகின்றன நேரில் அல்லது தபாலில் அல்லது பிரபல புத்தக நிறுவனங்களில் பெற்றுக்கொள்ளலாம். Bond. 58A. ஸ்ரான்லி வீதி. யாழ்ப்பாணம். [8358]

### அக்கரைச் சீமையில

250 நாடகங்களை எழுதி ஆயிரம் பாத்திரங்களைப் படைத்த அராலியூர் சுந்தரம் பிள்ளையின் நாவல் இலங்கைத் தமிழ் மக்களது இன்றைய வாழ்க்கை முறையின் ஓர் அம்சத்தைச் சித்கரிப்பது. 103 பக்கங்கள். [35281]

### வகுப்புகள்

ஜெயா கேக், ஐசிங் பயிற்சி வகுப்புக்கள் (சமயற்கலை, ஐசிங் வகைகள் Emproiere works, Flower Making, கலியாண கேக் வடிவமைப்புக்கள்) 10ஆம் திகதி ஆரம்பமாகின்றன. தொடர்பு: ஜெயா கேக், ஐசிங் ஸ்தாபனம் இல 7, ஜெயமகால், கற்குழி ஒழுங்கை, சாவகச்சேரி. [8365]

### தேவை

கடைக்கு பாவிக்க உகந்த நல்ல நிலையிலுள்ள கண்ணாடி அலுமாரி தேவை. சுமார் 8 அடி உயரம் 12 அடி நீளம். தொடர்பு கொள்ளவும். விசுவநாத பிள்ளை (அல்லை) S R. S. கட்டடம், சிவன்கோயில் வடக்கு வீதி, யாழ்ப்பாணம். [35426]

### G A.Q. வினா-விடை

ஜெயகாந்தனின் (G. A. Q. வினா-விடை அரசியல்) அரசறிவியல் நிறுவனங்கள் Ex. Ps 1 2 விற்பனையாகின்றது. யாழ். நகரின் பிரபல புத்தகசாலைகளில் கிடைக்கும். (35509)

### மணமகள் தேவை

யாழ். இந்து, 32 வயது, இலங்கையில் தொழில்செய்யும் சிவில் எஞ்சினியருக்கு பெற்றோர் பட்டதாரியான மணமகளை எதிர்பார்க்கின்றனர். திருவாதிரை, திருவோணம், சதயம், கார்த்திகை நட்சத்திரம் விரும்பத்தக்கவை. இல. 966, மே/பா உதயன். (8366)

## சிறுதானிய செய்கை

வலி. தென் மேற்கு பிரதேச செயலர் பிரிவில் கால போக நெல் அறுவடையின் பின்பு வயல் காணிகளில் சிறுதானிய செய்கை விவசாயிகளால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

மானிப்பாய், சண்டிலிப்பாய், சுதுமலை, சங்குவேலி ஆகிய இடங்களில் உள்ள வயல் காணிகளில் நெல் அறுவடையை அடுத்து பயறு, எள்ளு, சணல் ஆகியன விதைக்கப்பட்டுள்ளதை அவதானிக்கூடியதாகவிருக்கிறது

உ

## இராமகிருஷ்ண ஜெயந்தி தின விழாவும் சுவாமி விவேகானந்தரின் சிக்காகோ சொற்பொழிவு நூற்றாண்டு நிறைவு விழாவும்

காலம்: இன்று 06 — 03 — 1995 (திங்கள்)
இடம்: யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரி, பிரதான மண்டபம்

முதன்மை விருந்தினர்:
சுவாமி சித்ருபானந்தா அவர்கள் (ஸ்ரீராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமம் பருத்தித்துறை)

சிறப்பு விருந்தினர்:
திரு மா. வேதநாதன் (M. A) (யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத் துறை, சிரேஷ்ட விரிவுரையாளர்)

காலை 8-45 மணிக்கு யாழ். காங்கேசன் துறை வீதியில் உள்ள கதிரேசன் ஆலயத்திலிருந்து கல்லூரி மாணவர்களின் பஜனையுடன் ''இராமகிருஷ்ண பரமஹம்சரின்'' திருவுருவப்படம் ஊர்வலமாக கல்லூரி பிரதான மண்டபத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

### நிகழ்ச்சி நிரல்

| | | |
|---|---|---|
| மு. ப. | 9-15 | பிரார்த்தனை — கல்லூரி மாணவர்கள் |
| | 9-25 | தலைமை உரை — செல்வன் சி. அகிலன் |
| | 9-30 | வரவேற்புரை — பொறுப்பாசிரியர் க. தேவேந்திரன் |
| | 9-35 | அதிபர் ஆசியுரை — திரு. து. சந்தோசம் |
| | 9-40 | முதன்மை விருந்தினர் உரை — சுவாமி சித்ருபானந்தா |
| | 10-30 | சிறப்பு விருந்தினர் உரை — திரு. மா. வேதநாதன் |
| | 11-00 | இராமகிருஷ்ண கீர்த்தனைகள் — கல்லூரி மாணவர்கள் |
| | 11-30 | விவேகானந்தர் சொற்பொழிவிலிருந்து உரை — செல்வன் ம. உமாகாந்தன் ஆண்டு - 6 |
| | 11-35 | பக்தி நடனம் — கல்லூரி மாணவிகள் |
| ந. ப. | 12 00 | பேச்சு — செல்வி செ. சியாமளாதேவி ஆண்டு-12 |
| | 12-05 | நாடகம் — கல்லூரி மாணவர்கள் |
| | 12-25 | நன்றியுரை — மன்றச் செயலாளர், செல்வன் க. காசி ஆனந்தன் |
| பி. ப. | 1-00 | பிரசாதம் வழங்கல் |

★ பெற்றோர், பழைய மாணவர், நலன் விரும்பிகள் அனைவரையும் இந் நிகழ்வுகளில் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் வேண்டுகின்றோம்

— இந்து மாமன்றம்.

வைத்தீஸ்வராக் கல்லூரி,
யாழ்ப்பாணம் [சி 711]

உ

புங்குடுதீவு — கிழக்கு
## கலட்டி - ஸ்ரீ வரசித்தி விநாயகர் தேவஸ்தானம்
## வருடாந்த உற்சவ தினநாட்களை

இதயக் குமுறலுடனும் - ஏக்கப் பெருமூச்சுக்களுடனும் - இம்முறையும் நினைவு கூருகின்றோம்

ஓ......!
அந்தத் தெய்வீகமான - புனிதம் நிறைந்த - அழகிய நாட்கள் ... .....!

கொடியேற்றம் — 07 — 03 — 1995 செவ்வாய் (நாளை)
தேர்த்திருவிழா — 15 — 03 — 1995 புதன்
தீர்த்தோற்சவம் — 16 — 03 — 1995 வியாழன் (பூரணை நாள்)

இறைவா!
★ எடுத்த இலட்சியம் நிறைவேறிட நீ அருள்புரி!
★ அடுத்த வருடமாகிலும் ஆலயம் நாம் வரக் கருணை மழைசொரி

பொன். ஐயாத்துரை சிவசாமி,
பொதுச்செயலாளர்,
தேவஸ்தான பரிபாலன சபை.

கா. மதியாபரணம் ஜே. பி.,
ஆலய அறங்காவலர். (35521)

## நன்றி நவிலல்

27-02-95இல் கொக்குவில் கிழக்கில் சிவபதமடைந்த அளவெட்டி தெற்கு, டச்சு வீதியைச் சேர்ந்த
### உயர்திரு கந்தையா ஐயாத்துரை
அவர்களின்

மரணம் குறித்து நேரிலும், செய்தி மூலமும், அனுதாபத்தைத் தெரிவித்து அன்னாரின் ஈமச்சடங்குகள் செவ்வனவே நிறைவேற சகல வழிகளிலும், உறுதுணையாகவிருந்த அயலவர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், நண்பர்கள், உற்றார், உறவினர் அனைவருக்கும் எங்கள் நன்றியைப் பணிவன்புடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

தனித்தனியே நன்றி கூற இயலாமைக்கு வருந்துகிறோம்.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

பிரம்படி ஒழுங்கை,
கொக்குவில். (35522)

## நெஞ்சம் மறக்குமோ உங்களை?





| | |
|---|---|
| **அருளம்பலம் செந்திவேல்** | **எட்வேட் தங்கவடிவேல் திருநாவுக்கரசு** |
| (பொறியியலாளர்) கனடா | உரிமையாளர்: யோகநாயகி சினிமா (வல்வெட்டித்துறை) |
| மண்ணில்: 18 — 05 — 1940 | மண்ணில்: 10 — 09 — 1942 |
| விண்ணில்: 28 — 01 — 1995 | விண்ணில்: 05 — 02 — 1995 |

இவர்கள் இருவரினதும் மரணச்செய்தி அறிந்து எமக்கு நேரில் வந்து துக்கம் விசாரித்தும் அனுதாபச் செய்தி அனுப்பியோருக்கும் எமது நன்றி. இவர்களின் நினைவாக நாளை செவ்வாய்க்கிழமை (7 - 3 - 95) ஆத்ம சாந்தி பிரார்த்தனையிலும் பின் எமது இல்லத்தில் நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

திரு. திருமதி
எட்வேட் தங்கவடிவேல் ராஜ்குமார்,
சிறிஜெயந்தி ராஜ்குமார்,
குமரன் ரூரிஸ்ட் இன்
67, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம.

கிழக்கு தெரு,
(வல்வெட்டித்துறை) [35513]

## 31-ம் நாள் நினைவஞ்சலி



### திருமதி நவரத்தினராசா புனிதவதி

தென்மராட்சி மேற்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்க கிளை முகாமையாளரான
திரு ச. நவரத்தினராசா
அவர்களின் துணைவி புனிதவதி
04 — 02 — 1995இல் காலமானார்

அவரின் ஆத்மா சாந்தியடைய சங்க ஊழியர்களாகிய நாம் இறைவனை பிரார்த்திக்கின்றோம். அத்துடன் அவரது குடும்பத்தாருக்கு எமது அனுதாபத்தையும் ஆழ்ந்த கவலையையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

தகவல்:
தென்மராட்சி மேற்கு,
பலநோக்குகூட்டுறவு
சங்க ஊழியர்கள்.

கைதடி. (35523)

## கூட்டுறவுச் சங்கங்களுக்கு முத்திரை வரி கிடையாது

கூட்டுறவுச் சங்கங்களுக்கு முத்திரைவரியிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

இதனால் அரசாங்கத்திற்கு ஒருகோடி ரூபா வருமான இழப்பு ஏற்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக கூட்டுறவுத்துறை அமைச்சர் அமரசிறி தொடங்கொட சமர்ப்பித்த சிபாரிசை அமைச்சரவை கடந்த வாரம் ஏற்றுக் கொண்டது. (எ)

திருகோணமலை
## அருள்மிகு ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் தேவஸ்தானம்

சைவப் பெருந்தகையீர்,

ஸ்வஸ்தி ஸ்ரீ நிகழும் பவ வருடம் மாசித் திங்கள் 23 ம் நாள் [07 - 03 - 95] செவ்வாய்க்கிழமை முற்பகல் 8.00 மணிக்கு துவஜாரோகணம் [கொடியேற்றம்] நடைபெற்று தொடர்ந்து உற்சவங்கள் நடைபெற அம்பாள் திருவருள் கூடியுள்ளது.

07 - 03 - 95 செவ்வாய் காலை கொடியேற்றத் திருவிழா
14 - 03 - 95 செவ்வாய் இரவு மஞ்சத் திருவிழா
15 - 03 - 95 புதன் இரவு சப்பறத் திருவிழா
16 - 03 - 95 வியாழன் காலை 8-00 மணிக்கு தேர்த்திருவிழா.
17 - 03 - 95 வெள்ளிக்கிழமை பங்குனி உத்தரத்தில் அதிகாலை 5 00 மணிக்கு தீர்த்தத் திருவிழா. அன்றைய தினம் மாலை திருவூஞ்சல் நடைபெற்று துவஜாவரோகணம் [கொடியிறக்கம்] நடைபெறும்.
18 - 03 - 95 சனிக்கிழமை பூங்காவனத் திருவிழா நடைபெறும்.

இங்ஙனம்
சோ. இரவிச்சந்திரக் குருக்கள்
திருகோணமலை.

தகவல்
பொ. கிருஷ்ணமூர்த்திசர்மா
கல்வியங்காடு. [35529]

## ஆங்கிலம் கற்க வேண்டுமா?

பேச, எழுத, வாசிக்க, பரீட்சையில் சித்தி பெற உடன் நாட வேண்டிய இடம்!

### "A" LEVEL CENTRE
1ஆம் ஒழுங்கை, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.

ஆரம்பம்: 07 - 03 - 1995
Tue & Thu 5 — 6 p. m.
ஆசிரியர்: Miss A. ALISTA [சி-604]


## கண்ணீர் அஞ்சலி

எமது சக மாணவியான
சி. வசந்தமலரின் அன்புத் தந்தை
### N. சின்னையா

அவர்களின் மறைவால் துயருறும் அவருக்கும், அவரது குடும்பத்தினருக்கும் எமது அநுதாபங்களைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

யாழ். தொழில்நுட்பக் கல்லூரி
HNDA III
பகுதிநேர மாணவர்கள்
(35530)

## 31-ம் நாள் நினைவஞ்சலி



### அமரர் சோமநாதர் அம்பலவாணர்
(இளைப்பாறிய மலாயன் பென்சனர்)

பிறப்பு: 15 — 03 — 1903
மறைவு: 04 — 02 — 1995

அன்பொடு கருணை ஈகை
அறநெறி யாவும் வாய்ந்த
பண்புள்ள ஐயா! உந்தன்
பிரிவினால் வாடுகின்றோம்
எந்தையே நீ பிரிந்தாய்
என்றாலும் வாழுமட்டும்
உந்தனை மறக்க மாட்டோம்
உயர் கதி அடைக; வாழ்க

அன்புடன் மனைவியும்,
உறவினர்களும்.

மாதர் சங்க வீதி,
சித்தன்கேணி. (35497)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

392/2 காவலர் வீதி
யாழ்ப்பாணம்


## அரசின் முரசம்!

ஸ்ரீலங்காவின் பிரதிப் பாதுகாப்பு அமைச்சரும், முன்னாள் இராணுவச் சேனைலுமான அனுருத்த ரத்வத்த போர் முரசம் கொட்டியிருக்கிறார்!

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள இராணுவத்தினர் மத்தியில் பேசுகையில், மீண்டும் போருக்குத் தயாராக இருக்குமாறு அவர்களை உஷார்ப்படுத்தி உள்ளார்.

அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடைபெறும் சமாதானப் பேச்சுவார்த்தை தோல்வி காணும் பட்சத்தில், மீண்டும் போர் நடத்துவது என்பது அவரின் – அரசின் — முடிவு!

பேச்சுவார்த்தைகளில் இப்போது மந்த நிலை தோன்றியுள்ளது எல்லோருக்கும் தெரியும். இந்த மந்த நிலையுடன் பேச்சுக்கள் முறிந்து தோல்வி அடையலாம் என்று அனுருத்த கருதுகிறார் போலும்! அதனாலேயே அவர் படையினரை உஷார்ப்படுத்துகிறார். ஆயுதப் படைகளுக்குத் தேவையான சகலவற்றையும் கொடுப்பதற்கு ஆயத்தமாகிறார்

பாதுகாப்பு அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடு சென்ற வருடத்தை விட இந்த ஆண்டு நூறு கோடி ரூபா அதிகமாக ஒதுக்கப்பட்டதன் தாற்பரியம் இப்போது ஆதாரத்தோடு புரிகிறது அல்லவா?

மேலும்—

சமாதானப் பேச்சுவார்த்தையில் இப்போது தோன்றியுள்ள மந்தநிலை தற்காலிகமானது என்று ஜனாதிபதி சந்திரிகா கருதுகிறார். சமாதானப் பேச்சுத் தோல்வி அடையவில்லை என்கிறார். அதாவது பேச்சுவார்த்தை தோல்வி அடையக்கூடாது என்று நம்பிக்கையோடு சிந்திக்கும் போக்குடையவராக (Optimist) ஜனாதிபதி காட்டிக் கொள்கிறார். அவரே பாதுகாப்பு அமைச்சர்.

ஆனால் பிரதிப் பாதுகாப்பு அமைச்சரோ, (இந்தச் சந்தர்ப்பத்தை எடுத்துக் கொண்டால்) பாதுகாப்பு அமைச்சருக்கு எதிரானவராகக் காணப்படுகிறார். இப்போதைய மந்த நிலை பேச்சுவார்த்தை தோல்வியுறும் நிலைக்கு இட்டுச் செல்லும் என்ற சாதகமற்ற சிந்தனைப் போக்குடையவராகக் [Pessimist] காணப்படுகிறார்.

பேச்சுவார்த்தை தோல்வி கண்டால் விடுதலைப் புலிகளை வெல்லக்கூடிய பலம் எமது இராணுவத்துக்கு உண்டு என்று கருத்துக்கூறி, அரசின் போர்க்குணத்தை ஜனாதிபதி சந்திரிகாவும் சில வாரங்களுக்கு முன்னர் பிரதிபலித்ததை மறந்து விடுவதற்கில்லை!

அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில சமாதானப் பேச்சுக்கள் தொடங்கி ஆறு மாதங்களாவதற்கு இன்னும் ஒரு வாரம் இருக்கிறது. இரு சாராருக்கும இடையில் மோதல் தவிர்ப்பு இணக்கம் உண்டாக்கி, தாக்குதல்கள் ஓய்ந்து இரண்டு மாதங்களாவதற்கு இன்னும் இரண்டு நாள்கள் இருக்கின்றன.

இந்த மிகக் குறுகிய காலத்திற்குள் அரசாங்கத்துக்குப் போர்க்குணம் வந்துவிட்டது போரை முடிவுக்கு கொண்டு வந்து, இனப்பிரச்சினைக்கு சமாதான வழியில் அரசியல் தீர்வு ஒன்றைக் காண்பதற்காக மக்கள் வழங்கிய ஆணையை காற்றில் தூக்கி வீச மனங்கொண்டு விட்டது. அதனாலேயே அந்தத் தரப்பினர் போர் முரசம் கொட்டுகிறார்கள்.

போரில் எவருமே வெல்ல முடியாது என்றவர்கள் இவர்களே. மக்களையும், நாட்டையும் அழிப்பதற்கு வீணாக நடக்கும் அர்த்தமற்ற போர் என்று வர்ணித்தவர்களும் இவர்களே!

மோதல் தவிர்ப்பை போர் நிறுத்தமாக மாற்ற வேண்டியவர்கள்! போருக்குத் தயாராகிறார்கள்! முரசம் கொட்டுகிறார்கள் என்றால்...!?

அகத்தின் அழகே முகத்தில் தெரியும். மனதில் உள்ளதே நாவில் சொல்லாக வரும். உள்ளொன்று வைத்துப் புறம் ஒன்று பேசினாலும், உள்ளே உள்ளது ஒருநாள் வெளியே வந்துவிடும்! ஐக்கிய தேசியக் கட்சி இராணுவத் தீர்வென்று கூறி போர் நடத்தியது. புதிய அரசு சமாதானத் தீர்வு என்று கூறி, போர் நடத்த விரும்புகிறது. அவ்வளவுதான்!

புலிகளின் வானொலியை இடைமறிக்க

# பிரிட்டனில் இருந்து நவீன கருவி வாங்கியதில் பெரும் பண மோசடி!

கொழும்பு, மார்ச் 6

தமிழீழ விடுதலைப் புலிகளின் வானொலி சேவையை இடைமறிக்கும் தேவைக்கென வாங்கப்பட்டதாகக் கூறப்படும் நவீன கருவி கொள்வனவில் இடம்பெற்ற மோசடி தொடர்பாக இரகசியப் பொலீஸார் தற்போது முதற்கட்ட விசாரணைகளை நடத்தி வருவதாக கொழும்பு தமிழ் வார இதழ் ஒன்றில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

கடந்த காலங்களில் யுத்த தேவைகளுக்காக இறக்குமதி செய்யப்பட்ட இராணுவத் தளபாடங்கள், ஆயுதங்கள், உபகரணங்கள் குறித்து பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் உயர் அதிகாரிகளிடம் இரகசியப் பொலீஸார் விசாரணைகளை ஏற்கனவே ஆரம்பித்துள்ளனர்.

இதன் ஒரு கட்டமாக பிரஸ்தாப நவீனகருவி குறித்தும் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

பிரிட்டனின் 'ரெகல்' நிறுவனத்திடம் இருந்து ஏழரைக் கோடி ரூபா செலவில் அந்த கருவி கேள்விப் பத்திரம் கோராமல் இறக்குமதி செய்யப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

அந்த கருவியை முன்னர் மூன்றரைக் கோடி ரூபா செலவில் வாங்கவே திட்டமிடப் பட்டிருந்தது. ஆயினும் பின்னர் திடீரென அதற்கான செலவு ஏழரைக் கோடி ரூபா வானது எப்படி என்பது குறித்து ஏற்பட்ட சந்தேகமே இந்த விசாரணைகளுக்கு காரணம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அந்தக்கருவி பழுதடைந்து விட்டது எனக் கூறி அதனைத் திருத்த மீண்டும் மூன்று கோடி ரூபா செலவிடப்பட்டதாகவும் கூறப்பட்டுள்ளது.

எனினும் இன்று அந்த கருவி இயங்காத நிலையில் மௌனம் சாதித்து வருவதாக பெயர் குறிப்பிட விரும்பாத இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இரண்டாம் கட்டமாக இடம் பெறவுள்ள விசாரணைகளில் பாதுகாப்புப் படையினருக்கென இறக்குமதி செய்யப்பட்ட கணனிகள், மற்றும் உணவுப் பொருள்கள் குறித்த விவகாரங்கள் கவனத்தில் எடுக்கப்படவுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

### இணைந்து போட்டி

எதிர்வரும் உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல்களில் ஸ்ரீலங்கா முற்போக்கு முன்னணியும் ஜே. வி. பியும் கூட்டாக போட்டியிட முடிவு செய்துள்ளன.

ஸ்ரீலங்கா முற்போக்கு முன்னணியின் தலைவர் ஆரியா புலெகொட முன்கண்ட தகவலைத் தெரிவித்தார்.

# ஐ. தே. கவின் 2 வெற்றிடங்கள் ஒன்று கிழக்கு முஸ்லிமுக்கு

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்றத் தேசியப் பட்டியலில் இன்னும் நிரப்பப்படாதிருக்கும் இரண்டு வெற்றிடங்களில் ஒன்றுக்கு கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த முஸ்லிம் ஒருவரை நியமிப்பதற்கு ஐ தே க. தலைவர் ரணில் விக்கிரமசிங்க இணக்கம் தெரிவித்துள்ளார்.

மற்ற வெற்றிடத்துக்கு மத்திய மாகாண சபையின் சபைத் தலைவர் சரத் கொன்கஹே நியமிக்கப்படுவார்.

நியமிக்கப்படவிருக்கும் முஸ்லிம், கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த இளம் வர்த்தகப் பிரமுகர் என்று தெரிவிக்கப் படுகிறது.

இவர்கள் இருவரும் இவ்வாரம் நாடாளுமன்றத்தில் பதவிப் பிரமாணம் செய்து கொள்வர் என்று தெரிவிக்கப் படுகிறது.

கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த முஸ்லிம் ஒருவரை நியமிப்பதன் மூலம், அங்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அஷ்ரப்புக்கு உள்ள செல்வாக்கை பலவீனப்படுத்த வேண்டும் என்று ஐ. தே. கவில் உள்ள முஸ்லிம் எம்பிக்கள் கட்சித் தலைமையை வற்புறுத்தி வந்தனர் என்பது தெரிந்ததே. [இ-எ]

நீர் மின் விநியோக திருத்த வேலைகள் நடக்கும்போதே

# சிறுரக மின் பிறப்பாக்கிகள் மூலம் மின் வழங்குவதே பொருத்தமாகும்

1990 ஜூனில் இரண்டாம் கட்ட ஈழப்போர் ஆரம்பிக்க முன்னர் தமிழ்ப் பிரதேசம் எங்கும் நீர் மின்சாரமும் இருந்து வந்தது அதே சமயம் சுன்னாக மின் நிலையத்தின் சேவை மூலமும் மின் வழங்கும் நடவடிக்கைகள் இருந்து வந்தன. இவற்றை விட தனியாரும் தமது சொந்த தேவைகளுக்காக மின்பிறப்பாக்கிகளை பயன்படுத்தி வந்தனர். அரசாங்கத்தின் யுத்த நடவடிக்கையின் காரணமாக இன்று நீர் மின்சார விநியோகத்திற்கான மின் கம்பிகளும், கோபுரங்களும் அழிந்துள்ளன. சுமார் 77 கோபுரங்கள் புதிதாக நிர்மாணிக்கப்பட வேண்டும். அத்துடன் மின் கம்பிகள் புதிதாக நிறுவ வேண்டும்.

### திருத்துவதற்கு பெரும் செலவு

மேலும் சுன்னாகம் மின் நிலையம் குண்டுத் தாக்குதலால் முற்றாக சேதமடைந்துள்ளது. அங்குள்ள எரிபொருள் தாங்கி, மின்மாற்றிகள், மின்பிறப்பாக்கிகள் பாவிக்கமுடியாத நிலையில் உள்ளன. இவை அனைத்தும் புதிதாக அங்கு மீளவும் நிர்மாணிக்கப்படவேண்டும் சுன்னாகத்தில் உள்ள மின்மாற்றிகள் மிகப்பழைமை வாய்ந்தவை. இவற்றைத் திருத்தி பாவிப்பதானால் பெரும் செலவு ஏற்படுமே தவிர இதிலிருந்து 5 மெகவாட் மின்னை பெறமுடியுமா என்பது சாத்தியமற்றதாகவே இருக்கும். சுன்னாகம் மின் நிலையம் உட்பட தமிழீழத்தின் மின் வழங்கல் பற்றிய சாத்தியப் பாட்டை ஒரு உயர்மட்ட பொறியியல் ஆலோசனைக் குழு மூலம் விடுதலைப் புலிகள் ஆராய்ந்த பின்னரே இது பற்றிய விவரத்தை பேச்சுவார்த்தையில் முன் வைத்தனர்.

சுன்னாகத்தில் இருந்தது போன்ற பெரிய அளவு வலுக் கொண்ட மின் பிறப்பாக்கிகளை குடாநாட்டுக்கு கொண்டு வருவதாயின் இரண்டு வழிகள் உள்ளன. ஒன்று கப்பல், மற்றையது நெடுஞ்சாலை. கப்பல் மூலம் இவை கொண்டு வரப்படினும் பாரிய இயந்திரங்களை இறக்குவதற்கான வசதிகள், துறைமுகவசதிகள் இல்லை. இதனால்தான் பாதை திறக்க வேண்டுமென விடுதலைப் புலிகள் வலியுறுத்தினர்.

### உடனடியாக சாத்தியமில்லை

நீர்மின் இங்கு கொண்டு வருவதோ அல்லது சுன்னாகத்தை உடன் இயங்க வைப்பதோ உடனடியாகச் செய்து முடிக்கக் கூடியது அல்ல. மேலும் நீர்மின் எங்காவது தடைப்பட்டால் இங்கும் மின் கிடைக்காது இதனால் யாழ். குடாநாடு பாதிக்கப்படும். இவை இரண்டு முறையாலும் மின்வர பலமாதங்கள் தாமதம் ஆகலாம் என்பதாலும் நீண்ட அந்த இடைவெளிக் காலத்தில் இங்குள்ள மக்கள் இருளில் இருப்பதனை தவிர்க்கவும் 500 கிலோவற்றில் 15 உம், 250கிலோவற்றில் 78 உம் வலு கொண்ட சிறிய ரக மின் பிறப்பாக்கிகள் 93கேட்கப்பட்டன.

இந்த மின்பிறப்பாக்கிகள் மூலம் மின்னை வழங்கும் சமகாலத்தில் உயர்வலு மின் கோபுரங்களின் திருத்த வேலைகளையும் மேற்கொள்ள முடியும். இங்கு எரிபொருள் பாவனை, விறகு, விவசாயம், தொழிற்சாலை தேவை போன்ற இன்னோரன்ன தேவைகளுக்கு மாற்றீடாக குறைந்த விலையில மின்னை வழங்குவதன் மூலம் உற்பத்திச் செலவைக் குறைத்து வாழ்க்கைத் தரத்தை உயர்த்த முடியும். வடமாகாணத்திற்கு மட்டும் 27 ஆயிரம் கிலோவற் மின் தேவை. இதற்கு 12 ஆயிரம் பரல் டீசலும் 90 பரல் உராய்வு நீக்கி ஒயிலும் மாதம் ஒன்றுக்குத் தேவை. யாழ். குடாநாட்டிற்கு மட்டும் 25 ஆயிரம் கிலோவற் மின் தேவை. இவை முன்னைய கணிப்பு ஆகும். தற்போது தேவை இதனை விடக் கூடுதலாகவே இருக்கும்.

### ஏற்கனவே பாவனையில் இருந்தவை

சமீபத்தில் யாழ்ப்பாணம் கொண்டுவரப்பட்ட ஒவ்வொன்றும் 300 கிலோ வோல்ற் அம்பியர் மின்வலு கொண்ட இரண்டு மின்பிறப்பாக்கிகளும் ஏற்கனவே கொழும்பில் பாவனையில் இருந்தவையாகும். இவை வட தமிழீழத் தேவையின் 2%த்தை தன்னும் பூர்த்தி செய்ய மாட்டாது. யாழ். குடாநாட்டுத் தேவையின் 5%த்தை தன்னும் பூர்த்தி செய்யப் போதுமானதல்ல.

யாழ். மாநகர சபை எல்லையை மட்டும் எடுத்துக் கொண்டால் 18,[illegible] 700 பேர் மின்னைப் பெற்று வந்துள்ளவர். வீதியின் விளக்குகள் பொதுத் தேவைகளை விட யாழ். மாநகரசபை பகுதிக்குள் மட்டும் தேவையான மின்வின் அளவு 7,000–7500 கிலோவற். எனவே அரசினால் அனுப்பப்பட்ட மின்பிறப்பாக்கி யாழ் மாநகர சபையின் தேவையின் 8%த்தை தன்னும் பூர்த்தி செய்ய மாட்டாது.

### எரிபொருள் எப்படி வரும்?

இந்த இரண்டு மின்பிறப்பாக்கிகளுக்குமே மாதம் ஒன்றுக்கு 525 பரல் டீசல் தேவை. அத்துடன் உராய்வு நீக்கி ஒயிலும் தேவையாகும். எரிபொருள் தடை முற்றாக நீக்கப்படாத இவ்வேளை இதற்கான எரிபொருளைக் கொண்டு வருவது எப்படி. எரிபொருள் 3 மாத காலத்திற்கான கையிருப்பு அவசியமாகும். அத்துடன் இவற்றுக்கான உதிரிப் பாகங்களும் இல்லை. இவை பழுதடைந்தால் மீண்டும் இருளில் வாழும் நிலையே உருவாகும்.

இவை அனைத்தையும் ஆராய்ந்த பின்னரே விடுதலைப்புலிகள் இங்கு நீர் மின்னியல், சுன்னாகம் மின்நிலையத்திருத்தம் நடைபெறும் போதே சிறுரக மின் பிறப்பாக்கிகள் மூலம் மின்வழங்குவதோடு அவற்றுக்குத் தேவையான எரிபொருளையும் கையிருப்பில் ஆகக் குறைந்தது மூன்று மாதங்களுக்கு வைத்திருக்க வேண்டும் என வற்புறுத்தினார்கள்.

★

## ஆலயங்களில்

பண்டத்தரிப்பு — வடலியடைப்பு பாரத்தனை ஐயனார் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் இன்று திங்கட்கிழமை ஆரம்பமாகி 12 நாட்களுக்கு தொடர்ந்து நடைபெறும்.

தினமும் அபிஷேக ஆராதனைகள் சிறப்புபூசைகள்' பண்ணிசை சொற்பொழிவு என்பன இடம்பெற்று ஐயப்பன் வீதி உலா வருதலும் நடைபெறும். [எ 14]

★ ★ ★

இணுவில் சிவகாமி அம்மன் ஆலய வருடாந்த மஹோற்சவம் இன்று திங்கட்கிழமை காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும். எதிர்வரும் 16ஆம் திகதி வியாழக்கிழமை தேர்த் திருவிழாவும் மறுநாள் வெள்ளிக்கிழமை தீர்த்தோற்சவமும் நடைபெறும்.

உற்சவ நாட்களில் தினமும் இரவு 8 மணிக்கு திருமுறைகளின் 'இராமாய[illegible]' [illegible] சொற்பொழிவு இடம்பெறும்.

## புலிகளின் குரல் வானொலியில்

06 03 1995

திங்கள் இரவு

- ★ 8-01 — தளிர்கள் —சிறுவர்களுக்கான நிகழ்ச்சி
- ★ 8-20 — எங்களின் தேசம்
- ★ 8-30—செய்திகள்
- ★ 8-40 — தரிசனம்— நிகழ்ச்சியில் திருமதி ஞானரூபி கருணாகரன் அவர்களுடனான செவ்வி என்பன இடம்பெறும.

07 03 1995

செவ்வாய் காலை

- ★ 7 02 — மாவீரர் வணக்கம்
- ★ 7-15 — இன்றைய தாரகை
- ★ 7-30 — செய்திகள்
- ★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்
- ★ 7-40 — தாயகப்பாடல்கள் என்பன இடம்பெறும்

## தமிழீழ வானொலி ஒலிபரப்பு

திங்கள் மாலை

- ★ 5-01 — சிந்தனைச் சிதறல்
- ★ 5-02 — எழுச்சிக் கீதம்
- ★ 5-10 — புதியவை
- ★ 5-15 — ஆழிபமுதம்
- ★ 5-30 — மாணவர் பக்கம்
- ★ 6-00— சிந்தனைக்குச் சில வினாடிகள்
- ★ 6-02 — நேயர் நெஞ்சம்
- ★ 6-15 — விளையாட்டுச் செய்திகள்
- ★ 6-20 — என் தெரிவு
- ★ 6-30 — மணிக்கு மாலை நிகழ்ச்சிகள் நிறைவு பெறும்

## 'ஒளிவீச்சு'

நிதர்சனம் நிறுவனத்தின் மாதாந்த வீடியோ சஞ்சிகையான "ஒளிவீச்சு" ஜனவரி மாதத்திற்கான ஒளிநாடா வெளிவந்து விட்டது.

இந்தியாவின் திட்டமிட்ட சதியினால் வீரச்சாவடைந்த மூத்த தளபதி கேணல் கிட்டு உட்பட 10 மாவீரர்களின் 2 ஆம் ஆண்டு நினைவு "சமகாலப்பார்வை" எனும் அரசியல் நோக்கு, கலை நிகழ்ச்சிகள் மற்றும் பல வழமையான அம்சங்களை கொண்டு இந்த ஒளிநாடா வெளிவந்துள்ளது.

## மட்டக்களப்பில் உலர் உணவுக்கு பதிலாக பணம்

கொழும்பு, மார்ச் 6

மட்டக்களப்பு மாவட்டத்தில் இம் மாதம் முதல் உலர் உணவுப் பொருள்களுக்குப் பதிலாக பணம் வழங்கப்பட விருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பணக்கொடுப்பனவுகள் மாதம் இரு தடவைகள் வழங்கப்படும் என்று மட்டக்களப்பு அரச அதிபர் தெரிவித்தார். (எ)

# பிந்தி வந்த ஆசிரியருக்கு மாணவர்கள் தண்டனை!

## விடயம் பொலீஸ் வரை சென்றது!!

கொழும்பு, மார்ச் 6

பாடசாலைக்கு பிந்திச் செல்லும் ஆசிரியர்களைத் தண்டிக்கும் அளவுக்கு மாணவர்கள் முன்னேறிவிட்ட சம்பவம் ஒன்று மொனறாகலை மாவட்டத்தில் பிபிலை பகுதியில் உள்ள பாடசாலை ஒன்றில் இடம்பெற்றுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

மல்பிற்றகம்புற மகாவித்தியாலயத்துக்கு ஆசிரியர்கள் காலையில் வெகு நேரம் பிந்தியே கடமைக்குச் சென்று வந்தனர்.

கடந்த வாரம் ஒரு நாள் வித்தியாலயத்தின் மாணவ தலைவர்களுக்கு யோசனை ஒன்று பிறந்தது.

பாடசாலை தொடங்கும் நேரம் முடிந்தும் ஆசிரியர்கள் கடமைக்குத் திரும்பவில்லை என்பதை அறிந்தனர் உடனே பாடசாலையின் பிரதான கதவை மூடி மாணவர் தலைவர்கள் சீல் வைத்தார்கள்.

பாடசாலை சென்ற ஆசிரியர்கள் சீல வைத்து பூட்டப்பட்ட கதவைத்தான் கண்டனர்.

பொலீஸாருக்குத் தகவல் சென்றது. இரண்டு மணித்தியாலங்கள் கழித்து பொலீஸார் பாடசாலையை அடைந்து. சீல் வைத்துப் பூட்டப்பட்ட கதவைத் திறந்து ஆசிரியர்களை உள்ளே செல்ல அனுமதித்தனர்.

இச்சம்பவம் பற்றி மாணவர் தலைவர்கள் தெரிவித்ததாவது:-

ஆசிரியர்கள் நேரம் பிந்தி பாடசாலைக்கு வருவது நிரந்தரமான ஒரு நடைமுறையாகி விட்டது. இது மாணவர்கள் மத்தியில் உற்சாகமின்மையை ஏற்படுத்தியுள்ளது.

பிந்திவரும் மாணவர்கள் தண்டிக்கப்படுகிறார்கள் ஆனால் பிந்தி வரும் ஆசிரியர்கள் பற்றி பிரிவுக் கல்வி அதிகாரியின் கவனத்திற்குக் கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்படுவதில்லை.

இது பற்றி ஆசிரியர்கள் தெரிவித்ததாவது;

பாடசாலைக்கு அருகில் வசிக்க வீடு வசதிகள் கிடையா. பல மைல்களுக்கு அப்பால் எமது வீடுகள் உள்ளன. அப்படி பிபிலை பஸ் நிலையத்துக்கு வேளைக்கு வந்தாலும் பாடசாலைக்கு நேரத்துக்கு வரமுடியாதுள்ளது.

இதற்காக சட்டத்தை தங்கள் கைகளில் எடுத்துக் கொள்ள மாணவர் தலைவர்களுக்கு அதிகாரம் கிடையாது — என்று தெரிவித்தனர். [இ-எ]

உலர் உணவு நிவாரணத்திற்கென

# வட – கிழக்கு அகதிகளின் விவரம் திரட்டப்படுகிறது

கொழும்பு, மார்ச். 6

வடக்கு - கிழக்கில் இடம் பெயர்ந்து அகதிகளாக வாழ்வதற்கு தொடர்ந்து உலர் உணவு நிவாரணத்தை வழங்குவது தொடர்பாக புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சு அகதிகளின் விவரங்களை திரட்டி வருகிறது.

இத்தகைய அகதிக் குடும்பங்கள் படிவம் ஒன்றை நிரப்பி தத்தமது பிரதேச செயலகங்களில் ஒப்படைக்க வேண்டும் என புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சரின் வட மாகாணத்திற்கான இணைப்பதிகாரி மருதூர்க் கனி கேட்டுள்ளார்.

இதற்கான அறிவுறுத்தல்களும், படிவங்களும் சகல பிரதேச செயலகங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என்றும்

இடம்-பெயர்ந்து வாழும் அகதிக் குடும்பங்கள் பிரதேச செயலகத்திற்குச் சென்று படிவத்தைப் பெற்று பூர்த்தி செய்து அங்கேயே நேரடியாக ஒப்படைக்க வேண்டும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

படிவங்களை கையளிக்கத் தவறுவோர் உலர் உணவு நிவாரணம் பெற முடியாது என்றும் தெரிவிக்கப்பட்டது (ஐ)

## தமிழர் விவரம் திரட்டும் படையினர்

திருகோணமலையில் ஈச்சிலம்பத்தை, பூநகர் பகுதிகளில் உள்ள தமிழ் மக்களின் விவரங்களை அப்பகுதியிலுள்ள இராணுவத்தினர் சேகரித்து வருகின்றனர்.

வீடுகளிலுள்ள குடும்ப அங்கத்தவர்களின் எண்ணிக்கையை சேகரித்துள்ள படையினர், தினமும் அவ் வீடுகளுக்குச் சென்று அங்கத்தவர் எண்ணிக்கையை பரிசோதித்து வருகின்றனர்.

# எங்கள் தமிழீழத் தேசியம் குறித்து அஞ்சுகிறது இந்திய ஆளும் வர்க்கம்

## கலை இலக்கிய கருத்தரங்கில் ரவி

நாம் பலம்வாய்ந்த இராணுவமாக விளங்குகிறோம். அத்துடன் இந்திய ஆளும் வர்க்கத்திற்கு எதிரான கருத்துப் போரையும் நடத்திக் கொண்டிருக்கிறோம்

போர்க்குணம் கொண்ட தமிழீழத் தேசியம் உருவாகிறது என்பதுடன் புதிய கருத்துக்களும் தோற்றுவிக்கப்படுகின்றன என்ற அச்சம் இந்திய ஆளும் வர்க்கத்திடம் காணப்படுகிறது.

இந்திய ஆளும் வர்க்கத்தின் முதல் எதிரி எமது தலைவர் என்று சொல்லும் வகையில் இந்திய ஆளும் வர்க்கம் நடந்து கொள்கிறது.

தமிழீழ வெளியீட்டுப் பிரிவுப் பொறுப்பாளர் திரு. சு. ரவி இவ்வாறு தெரிவித்தார். விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகமும், "வெளிச்சம்" இதழும் இணைந்து நடத்திய மூன்று நாள் தொடர் கருத்தரங்கின் இறுதி நாள் நிகழ்ச்சிகளின் காலை அமர்வில் திரு. ரவி தொடக்கவுரை ஆற்றினார். அப்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நேற்றைய காலை அமர்வுக்கு யாழ் பல்கலைக் கழக இந்து நாகரிகத்துறை விரிவுரையாளர் திருமதி நாச்சியார் செல்வநாயகம் தலைமை வகித்தார்.

திரு. ரவி மேலும் பேசும் போது கூறியதாவது:

தமிழீழத் தேசியத்தையும், தமிழர்களின் போரையும் ஒடுக்குவதற்காக சிங்களப் பேரினவாதத்துடன் பல்வேறு வழிகளில் இந்திய ஆளும் வர்க்கம் இணைகிறது. அவர்களது தந்திரோபாயம் எடுபடாது என்பதால் அவர்கள் எமது தலைமையை அழிக்கும் நோக்குடன் இங்கு படையெடுத்து வந்து தோல்வியடைந்தனர். ஆனால் தொடர்ந்து கருத்துப் போராட்டத்தை நடத்துகிறார்கள்.

இன்று நாம் சிங்களப் பேரின வாதத்திற்கும் இந்திய ஆளும் வர்க்கத்திற்கும் எதிராக இருமுனைப் போரை நடத்திக் கொண்டிருக்கிறோம். சிங்களப் பேரின வாதத்தின் இராணுவத்திற்கு எதிரான போராட்டத்திற்கு நாம் வெற்றிகரமாக முகம் கொடுத்து முன்னேறி வந்துள்ளோம்.

மக்கள் கருத்துக்களை உருவாக்கி செயற்படுத்துவது கலை இலக்கியத்தின் பணியாகும். எமது போராட்டத்தைப் பொறுத்தவரை கலையுலக கர்த்தாக்கள் இப்பணியைப் புரிய வேண்டும். இதுவரை எட்டு தமிழாராய்ச்சி மாநாடுகள் நடைபெற்றிருக்கின்றன. இந்த மாநாடுகள் தமிழருக்குச் செய்த நன்மை என்ன? அவை வெறும் மொழிக்கான மாநாடாக நடந்ததேயன்றி தமிழ்மொழி பேசும் மக்களின் சுதந்திரத்திற்காக வாழ்வுக்காக அவை எதையும் சாதிக்கவில்லை.

இங்கு இடம்பெறும் இக்கருத்தரங்கு வெறும் கலையுணர்வை மட்டுமன்றி மக்களை போராட்ட வாழ்வுக்குள் கொண்டு செல்லும் கருத்தரங்காகவும் அமைகிறது — என்றார்.

### கலை மேம்பாட்டுக்கு போராட்டம்

திருமதி நாச்சியார் செல்வநாயகம் தமது தலைமையுரையில் கூறியதாவது:

பல்வேறு பிரச்சினைகளின் மத்தியிலும் போராட்டம் நிறைந்த வாழ்வுச் சவால்களின் மத்தியிலும் கலைபற்றிய பல கருத்து நிலவினாலும் மனித மேம்பாட்டுக்கு, யதார்த்தமாகச் சிந்திப்பதற்கு கலைகள் அவசியம்.

அரசியல் சுதந்திரத்திற்காக ஆயுதம் எடுத்துப் போராடுவது மட்டுமல்ல. குடும்ப வாழ்வின் உணர்வுகளை சமூகப் பிரச்சினைகளைச் சீர்படுத்தவும் கலை மேம்பாட்டுக்கான போராட்டம் தேவை.

மக்களின் நாளாந்த அவல நிலைகளைக் களைந்து புதிய நம்பிக்கையை ஏற்படுத்தவும் வருங்கால வாழ்வைப் பிரகாசப்படுத்தவும் கலைகள் நமக்கு அவசியம்— என்றார்

யாழ். பல்கலைக்கழக நுண்கலைத்துறைத் தலைவர் பேராசிரியர் கா. சிவத்தம்பி' கலாநிதி சபா. ஜெயராசா, கவிஞர் விவேக், சங்கீதபூஷணம் க. கணபதிப்பிள்ளை, பிரம்மஸ்ரீ ந. வீரமணி ஐயர் ஆகியோரும் நேற்றைய காலை அமர்வின் போது கருத்துரைகளை நிகழ்த்தினார்கள். (அ-க-111)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## செல்வன் செந்திவேலு பரணீதரன்

(யா/ ஹாட்லிக்கல்லூரி மாணவன்)

இராமயர் வளவு தும்பளை மேற்கைச் சேர்ந்த செந்திவேலு பரணீதரன் நேற்று அகால மரணமானார். இவர் செந்திவேலு சந்திரோதயத்தின் அன்பு மகனும், பாமினி, கோகுலன், ஆகியோரின் அன்புச் சகோதரரும் பிரபாகரனின் அன்பு மைத்துனரும் மீனாட்சிப் பிள்ளையின் அன்புப் பேரனும் கிருத்திகாவின் பாசமிகு மாமனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (05-03-95) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12மணிக்கு அவரது இல்லத்திலிருந்து முனை மயானத்திற்கு தகனக் கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறோம்

தகவல்
செ. பிரபாகரன்
(மைத்துனன்)

கிருத்திகா நகை அகம்
மந்திகை, புலோலி.

[35528]

## திருமதி செல்லம்மா கிருஷ்ணபிள்ளை

ஆவரங்காலைச் சேர்ந்த காலம்சென்ற கிருஷ்ணபிள்ளையின் மனைவி செல்லம்மா நேற்றுக் காலமானார்.

இவர் காலம் சென்ற கோபாலபிள்ளை மற்றும் தவமணி, நாகரத்தினம், சண்முகநாதன் (ப.நோ கூ. ச. ஊழியர் – அச்சுவேலி) ஆகியோரின் அன்புத் தாயார் ஆவார்.

இறுதிக் கிரியைகள் 6-3-95 இன்று பிற்பகல் 2 00 மணிக்கு நடைபெறும்.

தகவல்
மகன்

10ஆம் கட்டை,
ஆவரங்கால்.

(35531)

## திருமதி சித்திரா சுந்தரலிங்கம்

திருமதி சித்திரா சுந்தரலிங்கம் காலமானார்.

இவர் 8/2, ஸ்ரான்லிக் கல்லூரி வீதியில் வசித்தவரும், பொ. சுந்தரலிங்கத்தின் [மினிபஸ் உரிமையாளர்] அன்பு மனைவியும், பொன்னுத்துரை பாக்கியத்தின் அன்புமருமகளும், திருமதி லோகேஸ்வரி [ஆசிரியை அரியாலை ஸ்ரீபார்வதி வித்தியாலயம்], திருமதி ஞானேஸ்வரி [கைத்தொழில் சக்தி வள அமைச்சு திருகோணமலை], ஜெயந்தி, சுரேந்திரன் (சுவிஸ்), சுதாகரன் [சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், ஸ்ரீதரன் (கனடா), சண்முகவடிவேல் (உதவி முகாமையாளர் தேசிய வீடமைப்பு அதிகாரசபை) ஆகியோரின் அன்பு மாமியாரும், திருமதி இராஜேஸ்வரி [ராணி], யோகராசா(கனடா), புவனேஸ்வரி [தேசிய சேமிப்பு வங்கி கிளிநொச்சி], பத்மநாதன் [ஜேர்மனி], தர்மேந்திரன் யாழ். கல்வித் திணைக்களம்,] திருமதி கருணாதேவி (முன்னாள் பொலீஸ் திணைக்கள உத்தியோகத்தர்), தர்மகுலசிங்கம் (ஜேர்மனி), சிவகுமார் (சுவிஸ்] ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (06-03-95) திங்கள் காலை 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக செம்மணி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
பொ. சுந்தரலிங்கம்
29/ ஸ்ரீ 6804 மினிபஸ் உரிமையாளர்
[கணவர்]
பொன். தர்மேந்திரன்
(மைத்துனர்)

[35527]

## கந்தையா வேலுப்பிள்ளை

[இளைப்பாறிய யாழ். மாவட்ட தொழிலக இலிகிதர், திருகோணமலை சமநலசேவைத் திணைக்கள கணக்காளர்]

புளியங்கூடலை பிறப்பிடமாகவும், சரவணையை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா வேலுப்பிள்ளை (5.3.95) நேற்று அமரத்துவம் எய்தினார். இவர் கந்தையா முத்துப்பிள்ளை தம்பதியரின் புதல்வரும், இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும், வாசுகி (ஆசிரியை), வாசவன் (சுவிஸ்), வனிதா (யுனிக்கோ கொம்பியூட்டர் சென்ரர் மாணவி), வேலவன் (யாழ் இந்து மாணவன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், செல்வரத்தினம், காலஞ்சென்ற தர்மலிங்கம், மற்றும் வடிவேலு. காலஞ்சென்ற கோபாலபிள்ளை ஆகியோரின் சகோதரரும், தம்பிப்பிள்ளை-வியாழம்மா தம்பதியரின் மருமகனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் பற்றிய விவரம் பினனர் அறிவிக்கப்படும்.

தகவல்:
திருமதி இராஜேஸ்வரி வேலுப்பிள்ளை
(மனைவி)

தற்போதைய முகவரி:
378, நாவலர் வீதி,
நாவாந்துறை.

(35532)

## திருமதி நல்லதம்பி பாக்கியம்

புங்குடுதீவு 7 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவரு, தற்பொழுது செங்குந்தா வீதி, கல்வியங்காட்டில் வசித்தவருமாகிய நல்லதம்பி பாக்கியம் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற நல்லதம்பியின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற சின்னத்தம்பி, மாரிமுத்துவின் மகளும், நாகரெத்தினம் (சமநல சேவை நிலையம் – நல்லூர்), சற்குணபூபதி (புங்குடுதீவு), காலஞ்சென்ற கண்ணம்மா மற்றும் சொர்ணலிங்கம் (சுதந்திரபுரம்) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற மயில்வாகனம், மற்றும் துரைராசா, புஸ்பவதி, பகீரதி ஆகியோரின் மாமியாரும், காலஞ்சென்ற ஐயாத்துரை [முரசுமோட்டை], காலஞ்சென்ற பொன்னையா, மற்றும் நடராசா [முரசுமோட்டை] ஆகியோரின் அருமைச் சகோதரியும், காலஞ்சென்ற நாகமுத்து, மற்றும் அன்னபூரணம், நாகம்மா ஆகியோரின் மைத்துனியும், நாகேஸ்வரி, கோபாலபிள்ளை, தவராணி, விஜயதாஷன், நிர்மலாதேவி, சரஸ்வதி, இரவீந்திரன், மோகனதாஸ், சுவேந்திரராசா, தயாபரன், கோடீஸ்வரன், பிரதீபராஜ், புவனேஸ்வரன், கோகிலேஸ்வரன் ஆகியோரின் பேர்த்தியும், டிசேந்தினி, ஜீராஜேஸ்வரன் விதுஷன் பிரவின்ராஜ் ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று [திங்கட்கிழமை] பிற்பகல் 4 00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டிக்கொள்கிறோம்.

தகவல்,
ந. நாகரெத்தினம்
[மகன்]

[35533]

# பலமான நிலையில்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

யைதச் சூழ்நிலை, சமாதானச் சூழ்நிலை உள்ளது; தீர்வு வரும் என்று எல்லோரும் எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். நாங்களும் சந்திரிகா அரசு பதவியேற்ற போது இப்படித்தான் எண்ணினோம்.

ஆனால் இன்று நாளாந்தம் நடக்கும் சம்பவங்கள் இனித் தமிழர் எத்தனையாவது தடவை ஏமாறப்போகிறார்கள் என்ற சந்தேகத்தைத் தான் கிளப்பியிருக்கின்றன.

ஆனால் நாங்கள் ஏமாற்றப்படமாட்டோம். ஏனென்றால் பேச்சு மேடைக்குப் போகும் போதும் நாம் பலமான நிலையில் தான் போகிறோம்; பலம் தான் எமது இனத்தை வாழ வைக்கப் போகின்றது.

இந்தப் பலத்தின் ஊடே தான் பேச்சு மேடையும் இருக்கின்றது. ஆகவே நாம் ஏமாற்றப்படமாட்டோம்.

தமிழருக்கு உரிமை வழங்குகின்றோம், நிறையச் செய்கின்றோம் என்றெல்லாம் இன்று சிங்கள அரசு சர்வதேச உலகுக்கு பொய்ப் பிரசாரத்தைக் கட்டவிழ்த்து விட்டிருக்கிறது

ஆனால் எமது மக்களுக்கு உண்மை தெரியும். நாம் விழிப்பாக இருப்போம்; உறுதியாக இருப்போம்; பலம் பெறுவோம்; பலத்துடன் இருந்து கொண்டு சமாதானத்துக்கு வருவோருடனும் பேச்சுக்கு வருவோருடனும் பேசுவோம்;

எமது மக்களின் உரிமை, வாழ்வு, எமது மண் என்பதில் நாம் உறுதியாக இருக்கிறோம்.

எமது இந்த உறுதிப்பாட்டோடு மக்களும், கலைஞர்கள், அறிஞர்கள், பெரியோர்கள் எல்லோருமே ஒன்று சேர்ந்து எமது விடுதலைப் போராட்டத்தை முன் எடுப்பதற்கும், அது வெற்றிகரமாக நகர்த்திச் செல்வதற்கும் ஒத்துழைக்க வேண்டும்.

இங்கு வந்த சிங்கள சமாதானக் குழுவினர் சிங்களத் தலைவர்களுள் மிக வித்தியாசமானவர்கள் என நாம் கருதினோம். அது உண்மை.

ஆனால் அதில் வந்த சிங்கள மத குருமார், அறிஞர்கள் எல்லோரும் சிங்கள தேசியத்துக்கே முக்கியத்துவம் கொடுத்தனர். சிங்கள தேசியத்துக்குப் பின்பே அனைத்தும் என்ற மனப்பாங்கோடு தான் அவர்கள் பேசினார்கள்

தமிழீழத்தில் இன்று நடக்கும் விடுதலைப் போராட்டமானது எமது இனத்தின் ஒட்டு மொத்தமான வாழ்வுக்கானது; எமது தேசியத்துக்கானது.

இந்தத் தேசியத்தை இங்கே நிலைபெறச் செய்யும் எமது தலைவரின் பாதையிலே— அவரின் காலத்திலே — அந்த முயற்சியிலே நாம் வெற்றி பெறவேண்டும். அதற்காக ஒன்றுபட்டு பாடுபடவேண்டும்.

நாம் விடுதலை பெறுவோம் பெற்றபின், இங்குள்ள நிர்வாக, நடைமுறைகள் பற்றி கருத்து வேறுபாடு இருந்தால் அப்போது பேசித் தீர்ப்போம்.

அதற்கு முன்னர் எமது தேசியத்தை நிலை நிறுத்த ஒன்றிணைந்து நின்று போராடுவோம்.

இது ஒரு புதிய திருப்பம். புதிய பாதை ஒன்றின் திறப்பு. எம் மண்ணில் எழுந்துவரும் புதிய கலை இலக்கிய எழுச்சியின் விடிவு.

காலத்தின் தேவையை, காலம் எமக்கிடும் கட்டளையை ஏற்று, காலத்தின் குரலாக ஒலிப்பவனே உண்மையான கலை இலக்கியவாதியாவான்.

எமது தலைவர் அடிக்கடி கூறுவது போன்று, நாங்கள் அமைக்கத் துடிக்கும் புதிய தமிழீழத்தின் நிர்மாணிப்பிலும் வழி நடத்தலிலும் கலை இலக்கிய வாதிகளின் பங்களிப்பு கணிசமானதாகும்.

இந்த எண்ணத்தை ஈடேற்றுவதில் எம் மண்ணின் கலைஞர்கள் பலர் பங்கேற்று வருகிறார்கள்.

உலகமெங்கும், தமிழர்கள் பரந்து வாழும் எவ்விடத்திலும் இன்று ஈழத்தமிழன் என்ற பதமே, எல்லோராலும் பெருமையுடன் உச்சரிக்கப்படுகிறது. வீரத்திலும் தற்கொடையிலும் தளராத மன உறுதியிலும் கலைகளிலும் இலக்கியத்திலும் தமிழீழத்தைக் குறிப்பிட்டு அதன் திறத்தையும் வளர்ச்சியையும் எங்கும் விதந்துரைத்துக் கொள்கின்றனர். 21 ஆம் நூற்றாண்டுக்குத் திறவு கோலாகவும், செப்பனிடப்பட்ட கலை இலக்கியங்களின் தோற்றுவாயாகவும் தமிழீழம் அமையப் போகிறது என்ற கருத்து உலகெங்கும் இன்று பேசப்படுகிறது.

இந்நிலைக்கு என்ன காரணம்?

### கலைஞர்களின் படைப்பு

எமது வீரர்கள் புதிய புதிய களங்களைக் காணுகிறார்கள்; பரணி பாடத்தக்க புதிய புதிய கருத்துக்களை உருவாக்குகிறார்கள்; உயிர்ப் பூவைக் கூடஊதித் தள்ளும் தற்கொடையின் உச்சத்தைக் காட்டி நிற்கிறார்கள்; உலகம் வியக்கக்கூடிய அற்புதங்களை இந்த மண்ணிலே நிகழ்த்திக் காட்டுகிறார்கள்.

இந்த உன்னதங்களுக்கு அருகில் நின்று எமது கலை இலக்கியப் படைப்பாளிகள் தினமும் திக்குளித்தபடியும் வாழ்வும் சாவும் எமக்கு இந்த மண்ணில் தான் என்றுரைத்தபடியும் தங்கள் படைப்புக்களை உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள்.

இந்தப் புதிய உருவாக்கம் இதுவரை உலகம்அறியாதது. எம் மண்ணின் எழுச்சியும் இங்கு எழுந்து வரும் புதிய கலை இலக்கியங்களும் உலகத்தை ஆச்சரியப்பட வைக்கும் புதிய தரிசனங்கள். எனவே தான் 21 ஆம் நூற்றாண்டுக்கு எம் மண்ணில் முகிழ்த்து வரும் கலை இலக்கியங்கள் வழி காட்டும் என்ற உலகத்தின் குரல் இன்று உண்மையின் குரலாகி நிற்கிறது.

### வித்தியாசமான விடுதலைப் போராட்டம்

எமது விடுதலைப் போராட்டம் இதுவரை நடந்த உலக விடுதலைப் போராட்டங்களிலும் வித்தியாசமானது. புதிய நாடொன்றின் பிறப்புக்கான போராட்டத்தை நாம் நடத்திக் கொண்டிருக்கும் இவ்வேளையில் கைக்குக்கிடைத்த தளப் பிரதேசங்களில் எங்கள் கனவுகளை நாங்கள் நனவாக்கி வருகிறோம்.

எம்மிடம் ஒரு தேசிய வானொலி உண்டு; ஒரு தேசியக்கொடி உண்டு; ஒரு தேசிய நிர்வாகக் கட்டமைப்பு உண்டு; எம்மக்களின் நெறி தவறாத வாழ்வுக்கு உத்தரவாதம் கொடுக்கும் காவல் துறை உண்டு; நீதிமன்றங்கள் உள்ளன; தேசியப் பொருண்மிய வளர்ச்சிக்கான அமைப்புண்டு. எமது தேசிய கலை பண்பாட்டு இலக்கிய வாழ்வுக்கான கழகம் உண்டு. இவை எல்லாவற்றையுமே நெறிப்படுத்தி இலக்கு நோக்கி நடத்திச் செல்வதற்கு எமது தேசியத் தலைவர் இருக்கின்றார்.

ஈழத் தமிழர்களுக்கு நீண்ட நெடுங்காலமாக ஒரு பாரம்பரியம் உண்டு; ஒரு பெருமை மிக்க பண்பாட்டு வாழ்வு உண்டு; வேர்களை அறிந்த தொன்மையான கலை இலக்கியங்கள் உள்ளன.

ஒரு தேசிய சுயநிர்ணய இனத்துக்குரிய சகல அம்சங்களையும் நாங்கள் உள்ளடக்கியுள்ளோம். எனவே தான் எமது போராட்டத்தில் நாம் தளராது இருக்கின்றோம். எமது மக்களும் தளராது இருக்கின்றார்கள்.

### தஞ்சாவூரில் நடந்தது

அண்மையிலே தமிழகத்தின் தஞ்சாவூரில் 8 ஆவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் இந்திய மத்திய அரசும் தமிழ் நாடு அரசும் சேர்ந்து தமிழ பண்பாட்டு மூலவேர்களையே அறுத்தெறிந்துவிட்டு— தமிழனின் வரவேற்புப் பண்பையே உதாசீனப்படுத்திவிட்டு— ஈழத்து அறிஞர்களுக்குச் செய்த அவமதிப்பையும் அவர்கள நடத்திய அநாகரிக அரங்கேற்றத்தையும் நாங்கள் அவதானித்துள்ளோம்

இன்று அதே அறிஞர்கள் இங்கே கூடியிருக்கிறார்கள். அவர்களுக்கும் இங்கு கூடியிருக்கும் அனைவருக்கும் தாழ்மையுடன் நான் ஒரு விண்ணப்பத்தை வழங்க விரும்புகிறேன்.

''எலிவளையானாலும் அது தனி வளையாக இருக்கவேண்டும்'' – என்பதுதான் அது.

எந்த மனிதனுக்கும் அவன் வீட்டு முற்றத்திலிருக்கும் மரத்தின் நிழலே மிகவும் இதமளிக்கும்; உலகக் கூரையின் கீழ் நாங்கள் ஒன்றானாலும் எங்கள் வேலிக்குள்ளேயே நாங்கள் உன்னதம் பெறுவோம்; இந்த உண்மையின் வழியே நாங்கள் தொடர்வோம்.

சத்தியத்தின் பாதையிலே எங்கள் பயணம் தளராது தொடருமானால் நாங்கள் உன்னதத்தின் உச்சியிலே மிக விரைவில் விளக்கேற்றுவோம்

அப்போது நேற்று அடைக்கப்பட்ட கதவுகள் திறக்கப்படும்; வாசல்களில் எம்மை வரவேற்க உலகம் காத்து நிற்கும்.

'1995 ஆம் ஆண்டுக்குப் பின் இந்த மண் [illegible] போய்விடும்; தனது இருப்பை இழந்துவிடும்; ஈழத் தமிழினம் இல்லாதழிந்து விடும்; எமது போராட்ட வாழ்வு எம்மக்களின் அன்றாட வாழ்வைப் பொசுக்கிவிடும்'. — என்றெல்லாம் உலக நாடுகள் எண்ணின. எம்மை அடக்க முற்பட்ட எதிரியும் இப்படித் தான் கனவு கண்டான்.

ஆனால் எமது தலைவரும் எமது போராளிகளும் எமது மக்களும், எமது கலைஞர்களும், இலக்கியப் படைப்பாளிகளும் இணைந்து கடந்த ஐந்து வருடங்களாக இந்த மண்ணில் உற்சாகத்துடன் நடத்திவரும் போரானது உலக நாடுகள் எதிர்பார்த்ததற்கு மாறாக— எமது எதிரி எண்ணியதற்கு வேறாக அமைந்துவிட்டது.

### தீயில் சிவந்தன

எமது நாட்டின் குயில்கள் வசந்த காலத்தில் மட்டும் பாடவில்லை; மயில்கள் கருமேகங்கள் சூழ்ந்த மழை நாளில் மட்டும் ஆடவில்லை; கோயில் மணியும் கொலுசு நாதமும் இங்கே வெறும் அழகியலை மட்டும் சொல்லி சப்திக்கவில்லை.

இங்கு இவையெல்லாம் தீயில் குளித்துச் சிவந்தன; பாட்டும் கூத்தும் இன்னும் பல கலைகளும் இங்கு எதிரிகளின் முகாம்கள் ஒவ்வொன்றாக விழ விழப் புதிது புதிதாக எழுந்தன; ஒலிக்கும் கருவிகளும், ஒளிக்கருவிகளும் இங்கு உச்சநிலை பெற்றன: புதிய இசைகள் பிறந்தன: புதிய பாடல்கள் பிறந்தன; ஒளிப்பேழைகள் உருவாகின: வீதிகளும் அரங்குகளும் விரிவாக்கம் பெற்றன; அவையே எமது ஆடற்கலைஞர் ஆடும் அரங்குகளாயின.

தமிழனின் கருக்கூத்தாக இருந்த தெருக்கூத்து இங்கு புலர்வு பெற்றது; கலைஞர்களும் இலக்கிய கர்த்தாக்களும் தோற்றம் பெற்றனர்; களத்தில் நின்று கருவி ஏந்திப் போராடும் போராளிகள் பலர் தங்கள் உள்ளத்து உணர்வுகளை எழுத்திலும் இசையிலும் மற்றும் கலைத்துறை சார்ந்த வடிவங்களிலும் வெளிக்கொணர்ந்தனர்.

### இலக்கியப் பரப்பில் புதிய விளைச்சல்

இது தமிழ்க் கலை இலக்கியப் பரப்பில் விளைச்சலை ஏற்படுத்தியது எல்லோரும் வியக்கத்தக்க அளவுக்கு போராளிகளின் ஆக்கங்கள் புதிய திசையில் பிரவாகம் கொண்டுள்ளன. நாளைய ஆய்வாளர்கள் இவர்களின் படைப்புக்களை நிச்சயமாக ஆச்சரியத்துடன் நோக்குவார்கள் என்பது திண்ணம்.

எம்மண்ணுக்கு கலை, இலக்கிய ஆடைகட்டி அழகு பார்க்கும் கலைஞர்களே! இலக்கியகர்த்தாக்களே! வெறுமனே கூடினோம்; கலைந்தோம் என்றில்லாது புதியதொரு விழிப்புணர்ச்சிக்கு எமது இந்தச் சந்திப்பு வித்திடவேண்டும்.

நாளை எம்மண் விடியும் போது அந்த விடிவுக்கு நாம் ஒவ்வொருவரும் காரணகர்த்தாக்கள் என்று நெஞ்சு நிமிர்த்தி நிற்கக் கூடியதாக ஒன்றிணைவோம்—என்றார்.

கவிஞர் புதுவை இரத்தினதுரை நிறைவுரை நிகழ்த்தினார். [உ-க-111]

## அரசின்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இம்மோதல் தவிர்ப்பு ஒப்பந்தம் முழு வெற்றியாகும். குறிப்பிடத்தக்க அசம்பாவிதங்கள் இல்லாமல் அமைதி நிலை கடைப்பிடிக்கப்படுகிறது.

இனப்பிரச்சினைக்கு பொருத்தமான ஓர் அரசியல் தீர்வு காணப்படுமானால் தமிழீழக் கோரிக்கையை கைவிடத் தயாரென விடுதலைப்புலிகள் மீண்டும் மீண்டும் கூறிவருகின்றனர். இது அரசின் முயற்சிகளுக்குக் கிடைத்த வெற்றியாகும்.

வடக்கு — கிழக்கு மக்களின் உரிமைகளை அங்கீகரிக்கும் விதத்திலும், நாட்டின் மக்கள் அனைவரும் ஒற்றுமையாகவும் சமாதானமாகவும் வாழ்வதற்கு வாய்ப்பளிக்கும் விதத்திலும் அரசியல் ரீதியான சமரசத்திட்டம் ஒன்றை அரசாங்கம் வகுத்துள்ளது.

இத்திட்டத்தைப் பரிசீலனை செய்யும்படி விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு அரசாங்கம் அழைப்பு விடுத்திருக்கிறது. ஆனால் அவர்களிடமிருந்து இன்னும் பதில் வரவில்லை.

வடக்கு — கிழக்கு மக்கள் சமாதானம் விரைவில் ஏற்படுவதையே விரும்புகின்றார்கள். எனவே அரசின் ஆலோசனைகளுக்கு விடுதலைப் புலிகள் உடனடியாகப் பதிலளிக்கும் என்று அரசாங்கம் எதிர்பார்க்கின்றது.

யாழ்ப்பாணத்தின் புனரமைப்புக்கான திட்டம் ஒன்றையும் அரசு முன்வைத்துள்ளது. இத்திட்டத்துக்கும் விடுதலைப் புலிகளிடம் இருந்து பதில் கிடைக்கவில்லை.

கிழக்கு மாகாணத்தில் அரசின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் பாரிய அபிவிருத்தி வேலைகளை மேற்கொள்ள எல்லா ஆயத்தங்களும் செய்யப்பட்டுள்ளன.

திருமலை பிரதேச அபிவிருத்தித் திட்டம் விரைவில் ஆரம்பிக்கப்படும். திருமலை நகரமும், துறைமுகமும் முற்றாக புனரமைக்கப்படும். அபிவிருத்தி வேலைகளை மேற்கொள்ள சமாதானம் அவசியமாகும். இதன் காரணமாகவே இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு கண்டு சமாதானத்தை நிலை நாட்ட அரசு முழுமூச்சாக ஈடுபட்டுள்ளது. விடுதலைப் புலிகள் இயக்கமும் ஜனநாயகக் கட்டுக்கோப்புக்குள் இயங்கும் ஏனைய தமிழ் அரசியல் குழுக்களும் அரசுடன் இவ்விடயத்தில் ஒத்துழைக்க இணங்கியுள்ளன.

இவ்வாறு ஜனாதிபதி தெரிவித்தார்.

அந்த வைபவத்தில் அமைச்சர் அஷ்ரப்பும் பேசினார்.

## தென் அமெரிக்க கடலில் இராட்சதபனிக்கட்டி மலை

பனிக்கண்டமான அன்டார்க்டிக்குடாவிலிருந்து பெயர்ந்து கொண்ட 70 கிலோ மீற்றர் (45 மைல்கள்) நீளமான இராட்சத பனிக்கட்டி மலை ஒன்று தென் அமெரிக்க கடலில் வடக்கு நோக்கி நகர்வதாக அறிவிக்கப்படுகிறது.

கேப் ஹோர்ன் என்ற இடத்திலிருந்து ஆயிரம் கிலோ மீற்றர் தொலைவில் காணப்படும் இப்பனிக்கட்டி மலை அப்பிராந்தியத்தில் கப்பற் போக்குவரத்துக்கு பெரும் அச்சுறுத்தலாக அமைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பூமியின் வெப்பநிலை அதிகரித்து வருவதன் காரணமாக, அன்டார்க்டிகாவில் இருந்து பெயர்ந்து வரும் இது போன்ற பனிக்கட்டி மலைகள் அடிக்கடி கடலில் எதிர்காலத்தில் காணப்படலாம் என்று பூகர்ப்பவியல் நிபுணர்கள் எச்சரித்துள்ளனர். (எ)

## அடுத்த 5 ஆண்டுகளில் 'எய்ட்ஸ்'நாடுகள் பட்டியலில் இந்தியாவுக்கு முதலிடம்

உலகில் எய்ட்ஸ் நோய் தீவிரமாகப் பரவி வரும் நாடுகளின் பட்டியலில் முதலாம் இடத்தை இந்தியா இன்னும் ஐந்து ஆண்டுகளில் பிடித்து விடும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மெல்போர்னில் நேற்று முன்தினம் ஆரம்பமான அவுஸ்திரேலிய மக்கட்தொகை தொடர்பான கருத்தரங்கு ஒன்றில் கல்விமான்கள் இந்த எச்சரிக்கையை விடுத்தனர்.

எய்ட்ஸ் வேகமாகப் பரவி வரும் நாடுகளின் பட்டியலில் இருண்ட கண்டம் என்றழைக்கப்படும் ஆபிரிக்காவே இப்போது முதலாவதாக உள்ளது. அடுத்த 5 ஆண்டுகளில் இந்தியா இந்த இடத்தைப் பிடித்து விடும் என்று மொனாஷ் பல்கலைக்கழகப் பேராசிரியர் ஒருவர் தெரிவித்தார். (6)

## யாழ். மாவட்டத்தில் நவீன தொலைபேசித் திட்டம்

### சுவீடன் அமைக்கும்

யாழ். மாவட்டத்துக்கு 2 ஆயிரம் இணைப்புக்களைக் கொண்ட தொலைபேசி பரிவர்த்தன திட்டம் ஒன்றை செயற்படுத்த சுவீடன் அரசு முன்வந்திருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

யாழ். மாவட்டத்துக்கான தொலைத் தொடர்பு வசதிகளை மேற்கொள்ள விடுக்கப்பட்ட கோரிக்கையை சுவிடன் அரசு ஏற்றுள்ளது என்று கொழும்பில் தெரிவிக்கப்பட்டது.

தமது அரசாங்கத்தினால் 2ஆயிரம் இணைப்புக்கள் கொண்ட தொலைபேசி பரிவர்த்தன நிலையத்தை 3 மாதத்தில் அமைத்து செயற்படுத்த முடியும் என்று சுவிடன் அரசு அதிகாரிகள் ஜனாதிபதி செயலணிக்குழுவிடம் தெரிவித்துள்ளனர் என்று அறிவிக்கப்படுகிறது. [எ-3]

## வேலை இழந்த பயிலுநர் போராட்டத்தில் குதிப்பு!

கொழும்பு, மார்ச் 6

அரசினால் பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ள பயிலுநர்கள் அரசுக்கு எதிராக பெரும் போராட்டம் ஒன்றை நடத்தி வருகின்றனர்.

தேசிய பயிலுநர் சபையாலும், தொழில் நுட்பக் கல்லூரியாலும் தெரிவு செய்யப்பட்டு பல்வேறு திணைக்களங்களில் பணியாற்றிய சுமார் 8 ஆயிரத்துக்கு மேற்பட்ட பயிலுநர் ஊழியர்களை அரச வேலையில் இருந்து நிறுத்தியுள்ளது தெரிந்ததே.

தமக்கு மீண்டும் வேலை வழங்குமாறு கோரி அவர்கள் கொழும்பில் பேரணிகளை நடத்துவதுடன் திணைக்களங்களுக்கு முன்பாக மறியல் போராட்டம் நடத்துவதிலும் ஈடுபட்டு வருகின்றனர். (ஐ-3)

## குமண நாளை வந்து சேரும்

யாழ்ப்பாணம், மார்ச். 6

உணவு மற்றும் அத்தியாவசியப் பெருள்களுடன் 'குமண' கப்பல் நாளை பருத்தித் துறைக்கு வந்து சேரும் என எதிர் பார்க்கப்படுகிறது.

நேற்று கொழும்பில் இருந்து புறப்பட்ட இக் கப்பலில், ஒரு தொகை அரிசியும் தனியார் மற்றும் ப. நோ.கூ. சங்கங்களுக்கான பொருள்களும் எடுத்துவரப்படுகின்றன (உ-3)

## பாடசாலைகளில்

உடுவில் மான்ஸ் தமிழ்க் கலவன் பாடசாலையின் விளையாட்டுப்போட்டி நாளை செவ்வாய் பிற்பகல் 1.30மணி முதல் அதிபர் திரு.வி. நாகையா தலைமையில் நடைபெறவுள்ளது. (ஐ)

★ ★ ★

கோப்பாய் மகாவித்தியாலயத்தின் இல்ல மெய் வல்லுநர் போட்டிகள் நாளை செவ்வாய் பிற்பகல் 2மணி முதல் வித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளன. (ஐ-30)

## வடக்கே...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வந்தன.

இத்தகைய அனுமதியுடன் பொருள்கள் வருவதால் அவை மீதான சோதனை மற்றும் கெடுபிடிகளை படையினர் ஓரளவு குறைத்திருந்தனர்.

ஆனால் இப்போது இந்த நடைமுறை மாற்றப்பட்டுள்ளது.

யாழ். அரச அதிபரின் கொழும்பு இணைப்பதிகாரி மூலம் பொருள்கள் நேரடியாக வடக்கே கப்பலில் அனுப்ப ஏற்பாடு செய்யப்படுவதால் —

அப்பொருள்களை படையினர் துறைமுகத்தில் வைத்து துருவித் துருவி ஆராய்வதாக தெரிவிக்கப்பட்டது.

சில பொருள்களை கப்பலில் ஏற்ற படையினர் அனுமதி மறுத்து வருவதாகவும் கூறப்பட்டது. (உ-3)

## ஆதர்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பதவியில் இருந்து ஓய்வு பெறுவார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

புதிய ஆணையாளராக ரஜீவ் குணவர்த்தனா நியமனம் பெற்றுள்ளார். (உ-3)

இப்பத்திரிகை நியு உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிற்றெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி 892/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 06-03-1995 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org